தமிழகத்தில் வனவிலங்குப் பகுதியென மத்திய அரசால் தடை விதிக்கப்படாத வனப் பகுதிகளை, மலைவாழ் மக்கள் சங்கத்தினருக்கு “சிறு வன மகசூல்” அனுமதி வழங்க, அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறிவிக்கப்பட்ட சரணாலயப் பகுதிகளைத் தவிர்த்து, ஏனைய வனப் பகுதிகளில் விளையும் சிறு வனப் பொருட்களை இலவசமாகச் சேகரிக்கும் உரிமையை மலைவாழ் இனத்தவருக்குச் சில நெறிமுறை மாற்றங்களுடன் 29–4–2003-ல் மாண்புமிகு முதலவர் அம்மா அவர்களின் அரசு ஆணை வழங்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

97—

வீட்டு வசதி வாரியம்

***37482–திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி நகரப் பகுதியில் வீட்டு வசதித் துறைமூலம் அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டித் தர, நடப்பாண்டில் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அவிநாசி நகரப் பகுதியில் அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2004 ஜூலை 30]

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே வாரி வழங்கும் வள்ளல் குணம் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், அவிநாசி தொகுதிக்கு உட்பட்ட வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் அதிகமான தொலைதூரத்திலிருந்து வருவதால், அரசின் வேலைப்பாடுகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகள் தாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், அரசின் வேலைப்பாடுகள் விரைவாக நடைபெறுவதற்காக அடுத்த ஆண்டிலாவது அவிநாசியில், அரசு அலுவலர் குடியிருப்புகள் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 373, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24–4–1979–ன்படி, மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் மட்டுமே அரசு அலுவலருக்கான வாடகைக் குடியிருப்புகள் கட்டப்படும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அவிநாசியில் அரசு ஊழியர் குடியிருப்பு கட்டும் திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, தற்போது விலை அதிகம் என்ற காரணத்தால் விற்கப்படாமல் இருக்கிற வீட்டு மனைகளையும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. வினா எண் 98, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.